**DECEMBER 2015** **U/ID 30601/ULAA/UGLAA**

---

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளிக்க.

1. வேகவதி எனப்படுவது யாது?

2. திருவருட்பா எத்தனைத் திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளது?

3. 'எங்கிருந்தோ வந்தான்' என்று பாரதி யாரைக் குறிப்பிடுகிறார்?

4. சிறுவீதியின் அழகை நா. காமராசன் எவ்வாறு சுட்டியுள்ளார்?

5. விரக்தியை மு. மேத்தா எப்படிச் சுட்டியுள்ளார்?

6. 'நெருப்பைச் சுமந்த கருப்பை' என்னும் தொடர் யாரைக் குறிக்கிறது?

7. நாவுக்கரசருக்கு வழங்கப்படும் வேறுபெயர்களுள் இரண்டினை எழுதுக.

8. 'மன்னர் பெருமை மடையர் அறிவரோ?' என்று பேசுபவர் யார்?

9. இலக்கணக் குறிப்பு தருக :

(அ) அடிமலர்

(ஆ) சாதி சாதி

10. பொருள் பொருத்தமான சொல்லை எடுத்து எழுதுக :

அள்ளல் = அல்லல், துன்பம், சேறு

செருநர் = நண்பர், பகைவர், உறவினர்

பகுதி ஆ — (5 × 6 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) தமிழின் சிறப்புகளாகப் பெ. சுந்தரனார் மொழிவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'ஆல்' கவிதையில் குரங்கின் அச்சவுணர்வு புனையப்பட்டுள்ள முறையை எழுதுக.

12. (அ) வாழ்க்கைத் தத்துவங்களாகக் கவிமணி குறிப்பிடுவனவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) வள்ளலார் படைத்துள்ள 'கோடையிலே இளைப்பாற்றி' எனத் தொடங்கும் பாடற் கருத்தை எழுதுக.

13. (அ) தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர் ஒருவரை நேர் காண்க.

(அல்லது)

(ஆ) விளையாட்டு வீரர் ஒருவரை நேர் காண்க.

14. (அ) புத்தகப் பண்பாடு குறித்து மு.வ. கூறியுள்ளதை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'எளிமை ஓர் அறம்' என்னும் கருத்தை மு.வ. எவ்வாறு வலியுறுத்தியுள்ளார்?

15. (அ) தமிழ்ப் புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஐரோப்பியர் வருகையால் தமிழ் இலக்கிய உலகம் பெற்ற பயன்களைச் சுட்டுக.

பகுதி இ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு <u>விரிவான</u> விடை எழுதுக.

16. (அ) வள்ளலாரின் திருவருட்பாச் சிறப்பை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) நம்பிக்கையின் மேன்மையை மு. மேத்தாவின் கவிதை வழி விவரிக்க.

17. (அ) உரையாசிரியர்களின் தமிழ்ப்பணி குறித்து ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) கிறித்தவர்களின் தமிழ்த் தொண்டு குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

18. (அ) மு.வ. கூறும் வழிபாடு பற்றி விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) பண்பாடு குறித்த மு.வ.வின் கருத்துரைகளை விளக்குக.

19. (அ) எரிபொருள் சிக்கனம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) மக்கள்தொகைப் பெருக்கத்தால் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் பற்றி விவரிக்க.

20. தமிழில் மொழிபெயர்க்க :

If we look at the history of mankind, we shall realize that the greatest good to mankind has been done by those who have been the men of action. Mere contemplation is of no use. It is true that every man wants to do some thing for mankind, and even for himself and his family, has first to chalk out a plan or strategy. He must also have a strong will and determination to act, that is, to translate his dreams, his imagination, his ideas and thoughts into action.

———————